## அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களிலும்

# ஒருநாள் சுற்றுலா அட்டை கிடைக்கும்

■ சென்னை

சென்னையில் மெட்ரோ ரயில் பயணத்தை மக்களிடம் ஊக்குவிக்கும் வகையில் கடந்த 2015-ம் ஆண்டு செப்டம்பரில் ஒரு நாள் சுற்றுலா அட்டை அறிமுகம் செய்யப்பட்டது. அதன்படி, பயணிகள் ரூ.100 கட்டணத்துடன் சேர்ந்து ரூ.50 அட்டைக்கான பணமும் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். ஒருநாள் முழுவதும் பல முறை பயணம் செய்யலாம்.

சுற்றுலா அட்டை வாங்கிய நாள் முதல் 30 நாட்களுக்கு அந்த ஒரு நாள் பயணம் இருக்க வேண்டும். பயணம் முடிந்த பிறகு சுற்றுலா அட்டைக்கான ரூ.50 திருப்பி அளிக்கப்படும்.

இதுதவிர, குழுவாக மெட்ரோ ரயிலில் பயணம் செய்தால் 10 சதவீதம் கட்டண சலுகையும், மாத கணக்கில் பயணிக்க டிரிப் கார்டு வாங்கி பயணம் செய்தால் 20 சதவீத கட்டண சலுகையும் பெற முடியும். சுற்றுலா அட்டை மற்றும் டிரிப் கார்டுகள் அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களிலும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.